(மாண்புமிகு திரு. துரைமுருகன்] [1990 ஆகஸ்ட் 20

ஐந்தாண்டுத் திட்டத்திலே 100 மெகாவாட் தயாரிக்கலாம் என்று நாம் திட்டம் போட்டிருக்கிறோம். அதில் 50 இடங்களை உலக வங்கியும் பார்வையிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய பரிந்துரை கிடைத்த பிறகு—பரிந்துரை மட்டுமல்ல நிதியும் அவர்களிடத்திலிருந்து தான் நாம் பெறவேண்டும்—எனவே அந்தப் பரிந்துரை கிடைத்த பிறகு, உடனடியாக எங்கெங்கு சாத்தியம் உள்ளதோ அங்கெல்லாம் இந்த ஆலைகள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்ட கண்காட்சி.

*620 திருமதி எஸ். பி. சற்குணம்:

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு பூம்புகார் கைவினைப்பொருள் கழகத்தால் கடந்த காலத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிகளின் மூலம் கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு இழப்பு?

(இ) தற்போது அதன் நிலை என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): தமிழ்நாடு கைவினைப்பொருள் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 376 கலைப் பொருள் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் ரூ. 56 இலட்சம் நிகர லாபம் ஈட்டியிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு மொத்தம் ரூ. 84 இலட்சம். இந்த ஆண்டுதான் அந்த இழப்பிலிருந்து மீண்டு ஏறத்தாழ ரூ. 13 இலட்சம் லாபத்தோடு இந்த நிறுவனம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

11-05 மணி

திருமதி எஸ் பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூம்புகார் கைவினைப் பொருள் கழகத்தில், தமிழகம் தவிர்த்து வெளி மாநிலங்களில் நடைபெற்ற கண்காட்சிகளில் அரசுக்கு இழப்பு ஏதேனும் ஏற்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் காலமாக, தமிழகம் தவிர வெளி மாநிலங்களில் 25 இடங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. அந்தக் கண்காட்சிகளின் மூலமாக அரசுக்கு ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்திற்கான காரணங்களை ஆய்வு செய்தபோது, அதற்கான விளம்பரம் செய்த வகைகளிலேயும் போக்குவரத்து மற்றும் இதர செலவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக செலவுகள் மேற்கொண்டதன் காரணமாகத்தான் இழப்பு ஏற்பட்டது என்பதை அறிந்து இனி வரும் எதிர்காலங்களில், இந்த இழப்புகள் ஏற்படா வண்ணம் நடைபெறுகிற கண்காட்சிகளின் மூலம் லாபம் ஈட்டுகிற வகையிலேயும், நடைபெற இருக்கிற கண்காட்சிகளின் மூலம் லாபம் ஈட்டுகிற வகையிலும், இந்த அரசு அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து வருகிறது.

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைத்தல்.

*5497 திரு. கே. சின்னசாமி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*8318 திரு. ப. சுந்தரம் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது மலை நெல்லிவாசல் நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாதுமலை நெல்லிவாசல் நாட்டில் ஆரம்ப சுகர்தார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.